REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85690

# நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 12உ திங்கள் (28—10—57) ★ ☆ வெளியூர்: ஐப்பசி 13உ செவ்வாய் (29—10—57) [இதழ் 116

## 50 நாளில் 5 மாடிக் கட்டிடம்!

ஐந்து மாடிகள் கொண்ட செங்கற்களாலான கட்டிடம் ஒன்றை ஐம்பது முதல் அறுபது நாட்களுக்குள் கட்டி முடிக்கக் கூடிய 'இராட்சச' இயந்திரம் ஒன்றை ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருப்பதாக 'டாஸ்' செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த இயந்திரத்தைக் கொண்டு வீடுகட்டுவதினுல், வேலைக்கான கூலி பத்தில் ஒரு பாகமாகக் குறைந்து விடுகிறது என்றும் இயந்திரம் தானுகவே செங்கல் அடுக்கி, சாந்துபூசி, சுவர்களை எழுப்பும் ஆற்றல் கொண்டது என்றும், சோதனைக்குப் பிறகு இந்த இயந்திரத்தைக் கொண்டு மாஸ்கோவில் வீடுகள் கட்டப்படும் என்றும் 'டாஸ்' தெரிவிக்கிறது.

### இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவதை......

# தென்னக மக்கள் அனைவரும் எதிர்க்கின்றனர்

## பிரச்சினை, உணர்ச்சி சம்பந்தப்பட்டது அல்ல

## இந்திபேசா மக்களுக்கு நிரந்தரமான இடையூறுகள் ஏற்படும்

### அரசியல் பேராசை கொண்டோர் ஒருமைப்பாட்டினை ஒற்றுமை எனக் குழப்புகின்றனர்

### சாதகபாதக நியாயங்களை விளக்கி பண்டிதருக்கு வேண்டுகோள்

*தமிழக நல்லறிவாளர் பலரின் முயற்சி*

இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தியைத் திணிப்பது பற்றி தென்னுட்டைச் சேர்ந்த பல அறிஞர்களும் கையொப்பமிட்டு 'பாரதப் பிரதம'ருக்கு வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளனர்.

அதில், டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர், திருவாளர்கள் சி. இராசகோபாலாச்சாரியார், டி. எம். கிருஷ்ணசாமி அய்யர், மற்றும், 'இந்து' ஆசிரியர் கே. சீனிவாசன், 'சுதேசமித்திரன்' ஆசிரியர் சி. ஆர். சீனிவாசன், 'தினமணி' ஆசிரியர் ஏ. என். சிவராமன், 'ஆனந்த விகடன்' ஆசிரியர் எஸ். எஸ். வாசன், 'கல்கி' ஆசிரியர் சதாசிவம், 'சுயராஜ்யா' ஆசிரியர் காசா சுப்பராவ், வழக்கறிஞர் சங்கத் தலைவர் வி. எல். எத்திராஜ், தமிழ்ப் பேராசிரியர் ஆர். பி. சேதுப் பிள்ளை முதலிய முப்பத்தைந்து பேர்கள் கையொப்பமிட்டுள்ளனர் (அனைவரின் பெயர்களும் நாளை வெளிவரும்); அந்த வேண்டுகோளின் முழு விபரமும் கீழே தரப்படுகிறது :—

### 1. இது ஒரு அரசியல் பிரச்சினை அல்ல!

அரசியல்வாதிகளைத் தவிர இதரர், பெரும் ஆர்ப்பாட்டம் செய்யவில்லை என்றபோதிலும், யூனியன் ஆட்சிமொழியாக இந்தி புகுத்தப்படுவதை தென்னுட்டு மக்களின் சகல பிரிவினரும் எதிர்க்கின்றனர். ஆட்சி மொழிக் குழுவினரிடம் சென்னை சர்க்கார் தந்த சாட்சியம், தென்னுட்டில் உள்ள காங்கிரசாரும் அதனை எதிர்க்கின்றனர் என்பதைச் சொல்வதாகும்; கட்சிக் கட்டுப்பாடுகள் அழுத்தமான குரலைத் தணிக்கமட்டுமே பயன்பட்டன. நிர்வாகம், வர்த்தகம், மற்றும் கல்வித்துறைகளைச் சேர்ந்தவர்கள், ஆளும் கட்சியை வெளிப்படையாக எதிர்க்க அஞ்சுவது இயற்கையே!

### 2. உணர்ச்சியா அல்லது வசதியா?

இந்தியாவின் கலாச்சார வெளிப்பாடுகள் எப்போதும் அதன் பல்வேறு பிரதேச மொழிகள் மூலமாகவே இருந்துவந்திருக்கின்றன. அதனுல், அதன் ஒருமைப்பாடு பாதிக்கப்பட்டதில்லை. பிரதேச மொழிகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் வேண்டியதின் அவசியம் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவை மக்களது இதயத்தின் ஆழத்திற்கு வேர்விட்டிருக்கின்றன. இப்போது இந்தி, அகில இந்திய அடிப்படையில் நிர்வாக மொழியாகமட்டுமே கொணரப்படுகிறது. அதனுல், இதில் உணர்ச்சி என்ற பிரச்சினைக்கே இடமில்லை. வசதி என்ற பிரச்சினைதான். சிலர் காட்டுகிற உணர்ச்சி எல்லாம் ஒரு ஒருமைப்பாடு வேண்டுமென்ற அரசியல் பேராசைதானே தவிர வேறொன்றுமில்லை. இவர்கள், ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் ஒன்ருக்கிக் குழப்பிக் கொள்ளுகிருர்கள்.

### 3. சாதகபாதக நியாயங்கள்

உணர்ச்சியைப் பொறுத்தமட்டில் அதுவே ஒரு நிறைவான வாதம் அல்ல; மேலும், திணிப்பு தங்களுடைய நலன்களுக்கு விரோதமானது எனக் கருதும் மக்களில் பெரும் பிரிவினரின் எதிர்ப்பு கிளம்பும்போது, அது நிச்சயமாக ஆபத்தானதாகும். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அதில் அடையும் திறமையை, இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் என்றைக்குமே பெறமுடியாது என்பதால், இந்தியைத் தாய் மொழியாகக்கொண்டவர்கள் ஆட்சி, மற்றும் இதர துறைகளில் நேர்மையற்ற முறையில் அனுகூலம் பெறுவர் என்ற நியாயமான ஐயப்பாடுதான் இந்த எதிர்ப்புக்கு அடிப்படை. இதரருக்கு ஏற்படக்கூடிய இடையூறுகள் நிரந்தரமானவையாக இருக்கும். ஓரவஞ்சனை நெஞ்சறிந்து இழைக்கப்படாமலிருக்கலாம்; ஆனுல் சந்தேகமின்றி இழைக்கப்படும்.

உபயோகத்திலிருக்கும் பழக்கமான ஒரு மொழிக்குப் பதிலாக புதிய அனுபவமற்ற ஒன்றைப் புகுத்தும் மாற்றம், அசௌகரியங்களடங்கியது என்பதை எவரும் மறுத்துரைக்கவில்லை. இதனைச் சமனப்படுத்தக்கூடிய அனுகூலங்கள் என்ன? எதுவும் தெரியவில்லை.

ஒரு அன்னிய மொழிக்கு எதிராக ஒரு தேசிய மொழி வேண்டும் என்ற உணர்ச்சியை வேண்டுமானுல்—அது அரசியல் ரீதியில் தவருன வழிகாட்டக் கூடியதென்ருலும் — அதனை ஒருவர் புரிந்துகொள்ளமுடியும். ஆனுல் ஏற்கனவே உள்ளதிற்குப் பதிலாக, ஒரு புதிய ஆட்சி மொழி வேண்டும் என்பதில் உணர்ச்சி வெறும் செயற்கையானதாகும். எதிர்காலத்தில் என்றைக்காவது ஒரு நாள், இந்தியாவின் எல்லாப் பிரதேசங்களிலும் எல்லாப் பிரிவு மக்களுடையவும் வழக்கு மொழியாக (பேச்சு மொழியாக) இந்தி வரக்கூடும் என்று நம்பப்படுமானுல், இப்போதைய உத்தேசத்திற்கு ஏதாவது பலனும் பொருளும் இருக்கமுடியும். ஆனுல் அந்த நம்பிக்கை, சந்தேகத்திற்கு இடமில்லாத—முடியவே முடியாத ஒன்ருகும்.

### 4. ஆங்கிலம் அதிகபட்ச வசதிகளைத் தருகிறது

இந்தியாவைப் பொறுத்தமட்டில், குறிப்பாக விஞ்ஞானம், தொழில் நுட்பம், மற்றும் இதர நவீன அறிவுத் துறைகளிலும் உயர்மட்டக் கல்வி பெற ஆங்கிலம்தான் தொடர்ந்து நீடித்தாக வேண்டும்; சர்வதேசத் தொடர்புக்கான மொழியும் அதுதான். வர்த்தகம், மற்றும் வியாபாரத்திற்கான உலகின் முதல் மொழியாக ஆங்கிலம்தான் விளங்குகிறது. இன்றைய இந்தியாவில், வாழ்வின் சகல துறைகளிலும் அது, பலனுள்ள வகையில் இயங்கி வருகிறது. ஆங்கிலத்தை அகற்றுவது என்பது, கிடைத்துள்ள நலனை உதறி எறிவதாகும்.

### 5. இந்தித் திணிப்பு தேசீய ஒற்றுமைக்கு வழி வகுக்காது என்பதுடன் பிரிவினைசக்திகளை ஊக்குவிக்கும்

கூட்டுக்கலப்பான அம்சங்களின் விளைவுதான் தேசீய ஒற்றுமை. ஒரு தொடர்பான மக்கள் கூட்டம் தாய்மொழியாகப் பேசும் ஒரு தனி மொழி ஒன்றுபட்ட உணர்ச்சிக்கு வழிகோலும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனுல், தேசீய ஒற்றுமை என்பது, ஒரே மொழி இருப்பதைப் பொறுத்திருக்கவில்லை. விரும்பாதமக்கள் மீது அதிகார பலத்தால் அதனைத் திணிப்பது, அதற்கு ஆதாரவாக எத்தனை வாதங்கள் சொல்லப்பட்டாலும், வேற்றுமைகளை முடுக்கிவிட அதுவே நிச்சயமான தூண்டுகோலாகி விடுகிறது. அதுதான் தெளிவான உண்மை என்பதை, பஞ்சாபியும், வங்காளியும் இந்தி மொழியுடன் பெரும் ஒன்றுபட்ட அம்சங்களைக் கொண்டிருந்தபோதிலும் பஞ்சாபிலும் வங்காளத்திலும் கிளம்பியுள்ள இந்தி எதிர்ப்பு நிரூபிக்கும். ஆனுல் அதே நேரத்தில், சுவிட்சர்லாந்து போன்ற சிறு நாடுகளும், கனடா போன்ற பெரிய நாடுகளும், ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்சி மொழிகளை வைத்துக் கொண்டிருப்பதினுல், பல மொழிகள் வழங்கப்படுவதை அங்கீகரிக்கும் அடிப்படையில் தேசீய ஒற்றுமைக்கான எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

(முடியவில்லை)

## இந்தித் திணிப்புக் குழு அறிக்கை

### சர்வ கட்சிக் கூட்டம் நடத்த உத்தேசித்திருப்பதாக மந்திரி தகவல்

சென்னை, அக். 27—'ஆட்சி மொழிக் குழு'வின் அறிக்கைபற்றி அதிகாரப்பற்ற முறையில், சர்வ கட்சித் தலைவர்களையும் கூட்டிவைத்து விவாதிக்க தான் உத்தேசித்திருப்பதாகவும், அதன் பிறகு, சட்டசபையில், அந்தக் குழுவின் அறிக்கையை விவாதிக்கலாம் என்றும் நிதி மந்திரி சுப்பிரமணியம், நேற்று முன்தினம் சட்டசபையில் தெரிவித்திருக்கிருர்.

## கண்ணீர்ப்புகைக் குண்டின் ஆற்றல் போலீசாருக்குத் தெரியவில்லை

### அவர்களது திறமைக்குறைவே துப்பாக்கியை நீட்டவேண்டிய அவசியத்தை உண்டுபண்ணிற்று

### துப்பாக்கிப் பிரயோகத்தை நியாயப்படுத்தும் நீதிபதியின் கருத்து

புவனேசுவரம், அக். 25—கடந்த ஆகஸ்டு திங்களில் ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த பார்பில் சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோது, போட்டித் தொழிற்சங்கவாதிகளிடை ஏற்பட்ட அடிதடியின்போது, போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து நால்வரைக் கொன்றனர்; பலரைப் படுகாயப்படுத்தினர்.

இது குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட மாவட்ட நீதிபதி, 'போலீசாரின் துப்பாக்கிப்பிரயோகம் நியாயமானதே' என அறிக்கை தந்திருக்கிருராம்.

"முதலில் கண்ணீர்ப்புகை பிரயோகித்தும், பின்னர் தடியடி செய்தும் பலனில்லாது போகவே தான் போலீசார் கடைசி ஆயுதமாக 'கலைவதில்லை' என்று தீர்மானமாக இருந்த அந்த சட்ட விரோதமான கூட்டத்தினைக் கலைக்க, துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர் என்று நீதிபதி கூறியிருக்கிருர்.

என்ருலும் அவர், 'கண்ணீர்ப் புகைக் குண்டுகளின் ஆற்றல் பற்றி அவற்றை உபயோகித்தவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை; அவர்களது திறமைக்குறைவின் காரணமாகவே கண்ணீர்ப்புகைப் பிரயோகம் பலனற்றுப்போயிருக்கிறது' என்றும் கூறியுள்ளனராம்.

## சென்னை சிறைக் கைதிகளுக்கு வேலை!

### போலீஸ் அமைச்சர் தகவல்

சென்னை, அக். 27—சென்னை போக்குவரத்துத் தொழிற்சாலையில், மத்திய சிறையில் உள்ள கைதிகளுக்கு வேலை தரப்படுகிறது என்றும், அவர்களுக்கு வெற்றிலைபாக்கு, புகையிலைப் பொருள்களுக்காக நாள் ஒன்றுக்கு ஒரு அணு தரப்படுகிறது என்றும் சென்னை போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம், 26-10-57ல் நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை 'சோப்,' நல்லெண்ணெய் தரப்படுகிறதாம்; இரண்டு நீல வண்ண உடைகள் தரப்பட்டுள்ளனவாம்.

அவர்கள் விடுதலை பெறும் போது, நற்சான்று இதழ் வழங்கப்படுகிறதாம்.

இந்தத் திட்டத்தை மாநில மாவட்ட சிறைச்சாலையில் உள்ளவர்களுக்கு அமுலாக்குவது பற்றி சென்னை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்.

## அழகப்பா நிறுவனத்தில் கல்வி அமைச்சர்!

சென்னை, அக். 26—"அழகப்பா நிறுவனம் சென்னை அரசாங்கத்திடம் மானியம் பெற்றுவருவதால், கல்வி அமைச்சர் அந்த நிறுவனத்தில் ஒரு உறுப்பினராக இருப்பது முறையா?" என்று எதிர்க்கட்சித் தலைவர் வி. கே. இராமசாமி கேட்டதற்கு மானியம் தருவதுபற்றி விதி முறைகள் உள்ளது என்றும், அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றே தான் அங்கம்வகிப்பதாகவும் திரு. சுப்பிரமணியம் சட்ட மன்றத்தில் கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 28—10—57 திங்கள்

# பலன் கிடைக்குமா?

சென்னை மாநிலத்தில் கடன் கொடுக்கல் வாங்கல் தொழிலை ஒழுங்குபடுத்தவும், அதை அரசாங்கம் திறம்பட கண்காணிப்பதற்கு வகைசெய்யவும் மசோதா ஒன்றை சென்னை அரசாங்கம் உருவாக்கி இருக்கிறது. சிலவகை வட்டித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் கொடுக்கும் தொல்லைகளிலிருந்து கடன்பட்டவர்களைப் பாதுகாப்பது என்பது இம்மசோதாவின் அடிப்படை.

அடகுக் கடைக்காரர்களைப் பொறுத்தவரையில் சட்டம் ஒன்று ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வருகிறது. தற்போதைய மசோதா, பாங்கு, கூட்டுறவுச் சங்கம், வருமான வரி செலுத்தாத விவசாயி முதலிய நீங்கலாக மற்றவகை லேவாதேவிக்காரர்களை மட்டுமே கட்டுப்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

லேவாதேவித் தொழிலை முழு நேரம் அல்லது துணைத் தொழிலாகக் கொண்டிருக்கின்றவர்கள் அனைவரும் இம்மசோதாவிற்கு உட்பட்டவர்களாவார்கள். இவர்கள், ஆண்டு ஒன்றுக்கு நூறு ரூபாய்க்கு அதிகமாகச் செலுத்தித் தொழில் செய்வதற்குரிய அனுமதியை அரசாங்கத்திடம் பெற்றாக வேண்டும் என்கிறது மசோதா.

ஒரு லேவாதேவிக் கடைக்குக் கிளைகள் இருக்குமானால், தலைமை அலுவலகத்திற்கும், ஒவ்வொருகிளைகளுக்கும் தனித்தனி வரி கட்டி தனித்தனியான அனுமதி பெற்றிருக்க வேண்டும். அதுவுமன்றி, முன்னறிவிப்பின்றி அலுவலகத்தை மாற்றக் கூடாது என்பதும் மசோதாவின் நிபந்தனை.

சிலவித குற்றங்களைப் புரிந்திருக்கின்றவர்களுக்கு தொழில் நடத்த அனுமதி அளிக்க முடியாது என்கிறது மசோதா. அதுபோன்றே, ஒருமுறை ஒழிக்கப்பட்ட அனுமதி, ஆறு மாதங்களுக்குள்ளாக அதே நபருக்கு மீண்டும் அளிக்க முடியாது என்றும் மசோதா அறிவிக்கிறது.

அடமானக் கடன்கள்மீது ஒன்பது சதவிகிதமும், வெண்ணிலைக் கடன்கள்மீது பன்னிரண்டு சதவிகிதமும் வட்டி வசூலிக்க வேண்டும் என்று மசோதா குறிப்பிடுகிறது. ஒவ்வொரு கடனுக்கும் தனிப் பத்திரத்தில் குறித்துள்ளதற்கும் சட்டத்தில் அனுமதித்துள்ளதற்கும் கூடுதலாகவும் வட்டி வசூலித்தால் ஆயிரம் ரூபாய் அபராதமும் ஆறு மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்று புதிய மசோதா அறிவிக்கிறது.

போலீசுத் துறைக்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் நீங்கலாக, மசோதாவின் மற்ற உள்ளடக்கங்கள் அனைத்தும் பார்ப்பதற்கு நல்ல பலன் தரக்கூடியதாகத்தான் இருக்கிறது. ஆனால் செயலளவில் மசோதாவின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற பலன் ஏற்படக்கூடுமா என்பதைத்தான் அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை.

மசோதாவில் விதிக்கப்பட்டுள்ள வட்டி விகிதங்களுக்குக் கூடுதலாக ஒரு லேவாதேவிக்காரர் வட்டி வாங்குகிறாரா இல்லையா என்பதை, கொடுத்த கடனுக்காக எழுதி வாங்கப்படும் கடன் பத்திரங்களிலிருந்து மட்டும் தீர்மானித்துவிட முடியாது. வட்டி விகிதத்தைப் பத்திரத்தில் குறைவாகக்காட்டி கூடுதலாக வசூலிக்கின்ற வழக்கம் உலகறிந்த உண்மை.

இவ்வாறு ஏட்டில் ஒன்றும், செயலில் வேறுமாக வட்டி விகிதம் வசூலிக்கப்பட்டு வரும் வழக்கம், கடன் கொடுத்தவரும் கடன்பட்டவரும் உடன்பட்டு செய்கின்ற செயலேயாகும். கடன் பெறுபவரின் பணத் தேவையைப் பயன்படுத்திக் கொண்டுதான் கடன் கொடுப்பவர் இத்தகு முரண்படும் முறையற்ற செயலைச் செய்யத் துணிகிறார் என்பதையும் மக்கள் தெரிந்தே இருக்கின்றார்கள். எனவே, புதிய மசோதாவின் வட்டி விகித வரையறுப்பால் இந்த முறையற்ற முரண்படும் செயலுக்கு முடிவு ஏற்பட்டுவிடாது. எப்பொழுதும் போல், புதிய மசோதா சட்டமாகி செயல்படும் வேளையிலும், இம்முறை இருக்கத்தான் இருக்கும்.

இம்முறையை வழக்கில் இல்லாமல் தொலைப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது, பெரும்பான்மை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதின்மூலம் மக்களுக்கு ஏற்படும் —ஏறிய வட்டிக்குக் கடன்படும் தொல்லைக்கு இடமே இல்லாது செய்ய முடியும். இதைச் செய்ய இந்த அரசாங்கத்தால் தரப்படும் எனக் கூற லேவாதேவித் தொழிலில் ஈடுபட்டு வரும் தனி நபர்களும் பிடிவாதம் காட்டமாட்டார்கள்.

மக்களுக்குத் தேவையான கடன் தொகையைக் கொடுத்து உதவ அரசாங்கம் கருதாத நிலையில், ஏறிய வட்டி வாங்குவதைக் கட்டுப்படுத்துவதற்கு என மசோதா கொண்டுவந்துவிடுவதால் மட்டும், எதிர்பார்த்த பலன் ஏற்பட்டுவிடாது. பொது மக்களுக்குக் கடன் கிடைப்பது அரிதானாலும் ஆகக்கூடும்.

அடுத்தபடியாக, கடன் கொடுத்தவர்கள் இம்சையிலிருந்து கடன்பட்டவர்களைப் பாதுகாப்பது என்பது. கடன்பட்டவர்களைத் தொடர்ந்து சென்று தொல்லை தருவது, அச்சுறுத்துவது, கடன்பட்டவரின் குடும்பத்தினரை மிரட்டுவது, அடித்துத் துன்புறுத்துவது போன்ற அக்கிரமச் செயல்களை யார் செய்வதாக இருந்தாலும் தடுக்கப்பட வேண்டியதுதான். இவ்வநீதிகளைத் தடுத்துநிறுத்த புதிய மசோதாவில் இடமளித்திருப்பது வரவேற்கத்தக்கதேயாகும்.

பொதுவாக நோக்குமிடத்து, மசோதாவின் மூலநோக்கத்திற்கு,—இம்மசோதா சட்டமாக்கப்படுவதின் மூலம் பலன் கிடைக்குமா என்பது ஐயத்திற்குரியதேயாகும். சட்டப் புத்தகத்தில் ஒரு புதிய சட்டம் இடம்பெறப்போகிறது என்ற திருப்திதான் நாம் கொள்ள வேண்டும்.

# ‘இந்தி ஆட்சிமொழியாக வேண்டுமா, வேண்டாமா?’

## ‘முடிவு கூற காங்கிரஸ் கட்சிக்கு அதிகாரம் ஏது?’

## ‘இந்தி பேசாத மக்களிடையே வாக்கெடுப்பு நடத்த வேண்டும்’

சென்னை, அக். 26—

“உங்களுடைய பத்திரிகையின் 17-ந் தேதி இதழ் தலையங்கத்தில், இந்தியாவில் சென்னையைத் தவிர இதர மாநிலங்களில், இந்திக்குக் கட்டாயப் பாடம் என்ற அந்தஸ்து தரப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். மாநிலங்கள் என்ற சொல் மூலம் நீங்கள் யாரைக் குறிப்பிடுகிறீர்கள்? மாநில மக்களையா, அல்லது மாநில சர்க்கார்களை நடத்தும் காங்கிரஸ் அமைச்சர்களையா?

“மக்களைக் குறிப்பிடுவதாக இருக்க முடியாது; ஏனெனில், மக்களிடை வாக்கெடுப்பு ஒன்றும் நடைபெறவில்லை; அல்லது, இதைப் பிரச்சினையாக வைத்துத் தேர்தல் நடைபெற்று, மக்கள் சம்மதமும் அளிக்கவில்லை. மந்திரிகள், காங்கிரஸ் மேலிடத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிற அபேட்சகர்கள்! காங்கிரஸ் மேலிடத்தவரில் பெரும்பாலானோர் இந்தி பேசுகிறவர்கள் என்பதுடன், இந்தி வெறியர்களின் சொல்படி ஆடுகிறவர்கள்! எனவே, மேலிடத்தவர், தேர்தலுக்கு அபேட்சகர்களாக, யார் இந்தியை ஆதரிப்பார்களோ—யார் பெரும்பான்மை முடிவுக்குக் கட்டுப்படுவார்களோ அவர்களைத் தான் தேர்ந்தெடுத்துத் தேர்தலில் நிறுத்திவைத்தனர்.

“எனவே, மாநிலங்களில் உள்ள மந்திரிகள், காங்கிரஸ் மேலிடத்தவரின் உத்தரவுகளைநிறைவேற்றுவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை.

“எனவே, இந்தி, இந்தியாவின் ஆட்சிமொழியாகவும், கட்டாய மொழியாகவும் ஆக வேண்டுமா, கூடாதா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள், இந்தி பேசாத மக்களேயாவர்! இந்த முக்கியமான பிரச்சினை குறித்து மக்களிடை ஒரு வாக்கெடுப்பு நடத்த வேண்டுவது அவசியமாகும். இந்தப் பிரச்சினைக்கு முடிவு கூற, சர்க்காரிலோ, வெளியிலோ இருக்கும் காங்கிரஸ் கட்சிக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது”

என்று, சி. இலட்சுமண அய்யர் என்பார், 26-10-57-ந் தேதிய ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ இதழில் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

# பர்மாவிலிருந்தும் தமிழர்களுக்குக் ‘கல்தா?’

## கெடுபிடி சட்டங்கள் நாளும் வளருகின்றன

### நேரு பண்டிதரிடம் ‘அகில பர்மா இந்தியர் காங்கிரஸ்’ முறையீடு

இலங்கைவாழ் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள கதி, பர்மாவாழ் தமிழருக்கும் வேறு காரணத்தால் ஏற்படவிருப்பதாக அபாய அறிவிப்பு ஒன்று தரப்பட்டிருக்கிறது.

அண்மையில், ஜப்பானிலிருந்து திரும்புகையில், பர்மா வந்த பண்டிதரிடம், ‘அகில பர்மா இந்தியர் காங்கிரஸ்’, அங்கு வாழும் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றியும், இன்னல்கள் பற்றியும் விளக்கி ஒரு மனு தந்துள்ளது எனத் தெரிகிறது.

அதில் கூறப்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளவை:—

“பர்மிய சர்க்காரின் குடியேற்ற-மற்றும் அன்னியர் பதிவுச் சட்டங்களின் ஏதாவது ஒரு விதியை மீறினாலும், அவர்கள் நாடு கடத்தப்படுவார்கள் என்று சட்டமியற்றப்பட்டிருக்கிறது; இதன் விளைவாக, பர்மாவிலிருந்து ஏராளமான ‘இந்தியர்’கள் வெளியேற வேண்டிய அவல நிலை ஏற்படுமென நாங்கள் அஞ்சுகிறோம்.

“தங்குவதற்குரிய அனுமதிச் ...ளால் இந்தத் தொகை கட்டப்பட முடியாததாகும்.

“மற்றும், பர்மா முழுவதுமாகப் பரவி, ஏராளமான ‘இந்தியர்’கள் விவசாய நிலங்களில் பல தலைமுறைகளாக வாழ்ந்து வருகின்றனர்; அவர்களுக்கெல்லாம் பர்மியக் குடியுரிமை வழங்கப்படவில்லை; அந்த உரிமையுடையவர்களே புதிய சட்டப்படி நிலம் வைத்திருக்க முடியும் என்று, தேசிய உடைமைச் சட்டம் சொல்லுகிறது; இதன் விளைவாக, பல தலைமுறைகளாக இருந்துவரும் நிலங்களிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்படுகின்றனர்.

“மேலும், இந்தியாவில் உள்ள பெற்றோருக்கோ, அல்லது எங்களை நம்பி வாழ்வோ...

# இலங்கை ‘இந்தியர்’ பிரச்சினை!

## பண்டிதருடன் பேசுவாராம் பண்டாரநாயகா

கொழும்பு, அக். 25—

இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா, அண்மையில் புதுடில்லி செல்லுகையில், பண்டித நேருவுடன், இலங்கை ‘இந்தியர்’ பிரச்சினைபற்றியும் பேசுவாராம்!

# ரஷ்யாவின் வெற்றி

## அமெரிக்காவிற்கு சுறுசுறுப்பு மருந்தாகிறது

வாஷிங்டன், அக். 24—

வானவெளியில் இயற்கைச் சந்திரன் ஒன்றைச் சுழலவிட்டு ரஷ்யா பெற்றுள்ள வெற்றி, அமெரிக்காவில் முக்கியமான விளைவுகளை உண்டாக்கியிருக்கிறது. அவற்றுள் ஒன்றுதான், குடியரசுத் தலைவர் ஐசனோவரின் நேரடிப்பார்வையின் கீழ், அமெரிக்க வானவெளிப் பயணத்திட்...

# சென்னை 14-வது வட்ட தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

## தோழர் டி. கே. சீனிவாசன் கலந்துகொண்டார்

சென்னை, அக். 25—

சென்னை 14-வது வட்ட தி.மு. கழகக் கிளையின் சார்பில் 20—10—57 மாலை அண்ணு பிள்ளைத் தெருவில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சேலம் சீனிவாசன் இன்னிசைக்குப்பின் கூட்டம் தோழர் இரகுநாதன் தலைமையில் துவங்கியது. தலைவர் தம் முன்னுரையில் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினர்.

அடுத்து, சென்னை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன், 'இந்தியை நாம் ஏன் எதிர்க்கிறோம்?' என்பதை விளக்கிப் பேசுகையில், இந்தி எதிர்ப்பு போன்ற போராட்டங்களில் ஈடுபடுவதன்மூலம் கட்சியை வளர்த்துக்கொள்ளும் நிலையில் தி. மு. கழகம் இல்லை என்றும், இந்தித் திணிப்பானது, நாட்டையும், நாட்டு மக்கள் வாழ்வையும் பாதிக்கின்ற பிரச்சினை என்றும், எனவே, இந்தியை எதிர்த்து தி. மு. கழகம் துவக்க இருக்கும் போராட்டத்தில் தமிழ் மக்களனைவரும் ஈடுபட்டு ஆதரவைத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பின்னர் தோழர் பாலகிருஷ்ணன் அவர்களால் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் படிக்கப்பட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இறுதியாகத் தோழர் டி. கே. சீனிவாசன் அரிய கருத்துரை வழங்கினர். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"தேர்தலுக்குப் பிறகு வேறு வேலை இல்லாத காரணத்தால் இந்த இந்தி எதிர்ப்பில் தி. மு. கழகம் ஈடுபடுவதாக யாரோ சொன்னர்கள் என்று இங்கு பேசிய தோழர்கள் எடுத்துச் சொன்னர்கள். வேலையில்லாமல் கஷ்டப்படும் கட்சியல்ல தி. மு. கழகம்; அதற்கு எவ்வளவோ வேலைகள் இருக்கின்றன. இந்தப் போராட்ட வேலையை நாங்களாகத் தேடிக்கொள்ளவில்லை. ஏன் எங்களுக்கு இந்த வேலையை இவர்கள் கொடுக்கிறார்கள்? இந்த வேலை, தி. மு. கழகத்திற்கே சொந்தமாகிவிடுமோ என்ற அச்சத்தால்தான் அவர்கள் இப்படிச் சொல்லுகிறார்கள். இவ்வேலையை நாங்கள் மட்டுமே சொந்தமாக்கிக்கொள்ளவும் விரும்பவில்லை; யார் வேண்டுமானாலும் செய்யலாம். எல்லாக் கட்சியினரும் இந்த இந்தி எதிர்ப்பு வேலையில் ஈடுபட்டால் அவர்களுக்கும் இலாபம் உண்டு.

"இந்த இந்தி எதிர்ப்புப் பிரச்சினைக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கிறது இன்றைக்கு நாட்டில்? தி. மு. கழகம் இந்தியை எதிர்க்கிற காரணத்தால் மற்றவர்கள் இதைப் பற்றிச் சிந்திக்காமலிருந்துவிட்டால் ஒன்றும் புரியாது. இந்தி நமக்கு ஏன் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால்தான் புரியும்.

"'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பார்கள். அதைப்போல, தி. மு. கழகம் இன்றைக்கு இந்தியை எதிர்க்க முனைந்துள்ளது. தி. மு. கழகம் போராட்டத்தை வலிய தேடி நடத்திக்கொண்டிருப்பதல்ல; ஆனல், போராட்டத்திலிறங்க வேண்டிய அவசியம் வந்தால் பிறகு நாடு கொள்ளாது. வெற்றியும் பெற்றே தீரும்.

"இந்திப் பிரச்சினை தி. மு. கழகத்தை மட்டும் பொறுத்ததல்ல; இந்தித் திணிப்பை எதிர்த்து சர்வகட்சிப் பிரமுகர்களும் கையெழுத்திட்டிருக்கின்றனர். எனவே, இந்தப் பிரச்சினை அவர்களுக்கும் உரியதுதான். அத்தனைக் கட்சியினரும் இந்தியை எதிர்க்கும்போது தி. மு. கழகம் மட்டும்—அண்ணுவும் நெடுஞ்செழியனும் மட்டும் இவர்கள் கண்ணில் தெரிவானேன்? தி. மு. கழகம்தான் இந்தியை எதிர்க்கிறது என்று இவர்கள் சொல்லுவார்களேயானல் அதிலே நாங்கள் பெருமையடைகிறோம்.

"துரோணர் அர்ச்சுனனை நோக்கி, 'உனக்கு என்ன தெரிகிறது?' என்று கேட்டதற்கு, 'மரமும், அதன் கிளைகளும், பறவைகளும்தான் தெரிகின்றன' என்ருனும்; அதைப்போல இங்குள்ள சிலருக்கு நாம் மட்டும்தான் தெரிகிறோம். வேடனுக்கு வீரம்தான் தெரியும்—விவேகம் தெரியாது. நாம் வெறும் வேடர்களல்ல—விவேகிகள். நம் கண்ணுக்கு மரமும், விண்ணும், மண்ணும், மண்ணிலேயுள்ள வீடுகளும் தெரிகின்றன; வீட்டிலே உள்ள மக்களும் தெரிகின்றனர்.

"மாடியிலே குழந்தைக்குத் தாய் அன்பு காட்டி அமுதூட்டுவதும், வீசுகின்ற வெண்ணிலவும், அதைக் கண்டு கவி பாடும் புலவர்களும், அவர்கள் எழுதிய புத்தகங்களை வாங்கிப் படிக்கும் தமிழர்களும் எங்கள் கண்ணுக்குத் தெரிகின்றனர். அவர்கள் மீது இந்தி திணிக்கப்படுவதை நாங்கள் அறிகிறோம்—அதை எதிர்க்கிறோம்."

தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், இந்தி திணிக்கப்பட்டால் என்னென்ன தீமைகள் நேரும் என்பதை விளக்கி, அதை எதிர்க்க வேண்டிய இன்றியமையாமையை எடுத்துக் கூறிவிட்டு, இந்தியப் பேரரசின் ஐந்தாண்டுத் திட்டமும், வரிச் சுமையும் மக்களுக்கு இழைத்துவரும் கொடுமைகளைச் சுட்டிக்காட்டி விளக்கினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

# தொல்காப்பியரும் திருவள்ளுவரும்!

## பேராசிரியர் வெள்ளைவாரணனர் கருத்து

"தொல்காப்பியர் வாழ்ந்த காலம் முதற் சங்கத்தின் இறுதிக் காலம் ஆகும்—சுமார் மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவராவார்; திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவராவார். தொல்காப்பியர் தமிழ் மொழிக்கு இலக்கணம் செய்தவர்; திருவள்ளுவர் தமிழ் மக்களின் வாழ்வுக்கு இலக்கணம் செய்தவர். தொல்காப்பியரின் கருத்துக்களை உள்ளமைத்தே திருவள்ளுவர் திருக்குறளைச் செய்திருக்கின்ருர்"

என்று, பேராசிரியர் க. வெள்ளைவாரணனர் அவர்கள் புதுக்கோட்டை திருக்குறள் கழகச் சார்பில் 6-10-57ல் நடைபெற்ற இலக்கியக் கூட்டத்தில், 'தொல்காப்பியரும் திருவள்ளுவரும்' என்னும் தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"உலகில் எந்த மொழியிலும் முதலில் பெருங்காப்பியம், பின்னர் சிறு பாடல்கள் என்ற முறைதான் காணப்படுகின்றது; ஆனல் நம் மொழியில் இன்று நமக்குக் கிடைத்திருக்கும் சங்கப் பாடல்கள் அனைத்தும் சிறு சிறு பாடல்கள்—பின்னரே சிலம்பையும் மேகலையையும் காண்கிறோம். இதிலிருந்து நம் மொழியின் தொன்மை தெற்றென விளங்குகிறது.

"இக்கருத்தை நம் நாட்டவர் கூறினல் நம்புவாரில்லை; பிற நாட்டினர் கூறினல் மக்கள் நம்புகின்றனர்—அதனை வரவேற்கின்றனர்; இது, நம் நாட்டில் காணப்படும் விசித்திர நிலையாகும்."

# இந்தித் திணிப்பை எதிர்த்துப் போர்முரசு

## அக். 13-ல் தமிழகம் குமுறி எழுந்த காட்சி

தி. மு. க. பொதுச்செயலாளர் விடுத்த அறிக்கைக்கிணங்க, 13—10—57-ல் நாடெங்கும் பொதுக்கூட்டங்கள்—ஊர்வலங்கள் மூலம் இந்தித் திணிப்புக்குக் கண்டனக் குரலெழுப்பிய செய்திகள் சுருக்கமாக இங்கு தரப்படுகின்றன :—

### சென்னை 11-வது வட்டம்

தி. மு. கழகப் பணிமனையிலிருந்து கொட்டு முரசத்துடன், இந்தி எதிர்ப்பு ஊர்வலம் துவங்கி வட்ட முழுவதும் சுற்றி வந்தது; இறுதியில் கழகப் பணிமனையில், தோழர் எஸ். எஸ். துரைசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் க. ந. வேலாயுதம், து. தமிழ்ச்செல்வன், நாகரத்தினம், ராமன், தெ. அன்பரசு, ஆகியோர் பேசியபின் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### சென்னை 14-வது வட்டம்

காலை 9 மணியளவில் தி. மு. கழகச் சார்பில், தோழர் தி. ம. பாலகிருட்டினன் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு, வட்ட முழுமையும் வலம் வந்தது. ஊர்வலத்தில் பொதுமக்கள் பெருவாரியாகக் கலந்துகொண்டனர். 11 மணியளவில் முடிவுற்ற இந்த ஊர்வலத்தின் இறுதியில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வட்ட முழுமையும் இந்தி எதிர்ப்புக் கொள்கைகளை விளக்கி சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன.

### சென்னை 30-வதுவட்டம்

காலை 9 மணிக்கு தி. மு. கழகத்துடன், துணை மன்றங்களும் சேர்ந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது. இந்தி எதிர்ப்பு வாசகங்களை சுவரொட்டி மூலமும் பிரச்சார மூலமும் பொது மக்களுக்கு விளக்கி, எதிர்ப்பை காட்டிக்கொண்டதுடன், ஊர்வலம் முடிவில் ஆயிரக்கணக்கான மக்கள் கையொலிக்கிடையே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஊர்வலத்தில் கலந்துகொண்ட மன்றங்கள் :— தி. மு. க. 30-வது வட்டம்; தமிழ் வளர்ச்சி மன்றம்; முனுசாமி நினைவு மன்றம்; நண்பர்கள் ஒற்றுமை மன்றம்; கே. வி. கே. சாமி மன்றம்; சமூக சேவை சங்கம்.

### சென்னை 37-வது வட்டம்

முத்தமிழ் முன்னேற்ற மன்றம் சார்பில், கழகக் கொடியேற்றி, மன்றக் கட்டிடத்தில் இந்தி எதிர்ப்பு நான் கூட்டம் நடத்தி, இந்தியை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தோழர் மோ. ராசாராம் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் சொர்ணம், மோ.கண்ணபிரான் ஆர். சம்பந்தன், ஆ. பக்தவத்சலம் ஆகியோர் இந்தியை எதிர்த்துப் பேசினர்.

### உசிலம்பட்டி :

தி. மு. க. சார்பில் மாலை 5 மணிக்கு போத்தம்பட்டி தோழர் இராமசாமி தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது; 6 மணிக்கு சந்தைத் திடலில், தோழர் மு. முனியப்பன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் பி. எஸ். மாணிக்கம், அ. உசிலைத்தம்பி, பி. சிவன்காளை, எஸ். வி. டி. இராசசேகரன் ஆகியோர் இந்தித் திணிப்பை எதிர்க்கவேண்டியதன் அவசியத்தைப்பற்றிப் பேசினர்; கூட்ட ஆரம்பத்தில் டி. என். தம்பித்துரை இயக்கப்பண் பாடினர்.

### திருப்பூர் :

மாலை 4 மணிக்கு நகர வழிப் போக்கர் விடுதியிலிருந்து ஓர் மாபெரும் ஊர்வலம் இந்தி எதிர்ப்பு ஒலிகளை முழங்கிக் கொண்டு நகர முக்கிய வீதிகளில் வந்தது; 1, 2, 3, 4-வது வட்டங்களில் தோழர் இளமுருகு கழகக் கொடியை ஏற்றி வைத்தார்; மாலையில், கொயல் நதியில், தோழர் கா. சு. சேரலாதன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழியர் எஸ். கமலம் இந்தி எதிர்ப்புப் பாடல்களைப் பாடியபின், தோழர்கள் சி. ஏ. பாலன், இரா. பாலசுந்தரம், இளமுருகு ஆகியோர், இந்தித் திணிப்பைக்' கண்டித்துப் பேசியபின், கண்டனத் தீர்மானத்தை நகரச் செயலாளர் வாசித்து கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றினர்.

### ஆண்டிமடம் :

மாலை 4 மணியளவில், தோழர் ஆர். செயராமன் தலைமையில் மாபெரும் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் புறப்பட்டு கவரப்பாளையத்தில் கொடியேற்றுவிழா நடத்திய பிறகு, மாலை 6 மணியளவில் தோழர் என். இராமனுதன் தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், தோழர்கள் ச. முருகேசன், அருணசலம், அ. நடராசன், புதுவை டி. கன்னையா, ராமகிருட்டினன் ஆகியோர் இந்தியைக் கண்டித்து சொற்பொழிவாற்றினர். இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### வேலூர் (வ. ஆ.) :

மாலை 4 மணிக்கு தோழர் வேதாந்தம் தலைமையில் டவுன் ஹாலிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு பல முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று டவுன்ஹாலில் வந்து முடிவுற்றது. ஊர்வலத்தில் கழகப் பிரமுகர்களும் ஏராளமான பொதுமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மாலை 6-30 மணிக்கு, டவுன் ஹாலில் தோழர் அ. பாலகிருட்டினன் தலைமையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் வே. சு. பாண்டியன், திராவிடமணி, வே. அ. இளஞ்செழியன், இமயவர்மன், மணி எழிலன் ஆகியோர் பேசியபின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பேளுக்குறிச்சி :

சேலம் மாவட்ட தி. மு. க. செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் இல்லத்தின் முன், பரந்தவெளியில், தி. மு. கழகச் சார்பில், தோழர் பேளுக்குறிச்சி கே. ரங்கசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் ஜி.பி. சோமசுந்தரம், ஓ. கொ. ப. சுப்பிரமணியம், பி. ஏ. துரைசாமி ஆகியோர் பேசியபின், தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

### அருப்புக்கோட்டை :

இராமநாதபுர மாவட்ட கீழ்ப்பகுதியில் கலவர சம்பந்தமாக அருப்புக்கோட்டையில் 144 தடை உத்தரவு அமுலில் இருப்பதால் இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டம் திருநகரத்திலுள்ள 'சிந்தனை மாளிகை' தி. மு. கழகப் பணிமனையில், தோழர் அ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் சு. நடராசன், பி. பி. என். நல்லதம்பி, எம். கே. இராமலிங்கம் ஆகியவர்கள் 'இந்தியை நாம் ஏன் எதிர்க்கிறோம்?' என்பது பற்றி பேசினர்.

### தேவகோட்டை :

தி. மு. க. சார்பில் மாபெரும் இந்தி எதிர்ப்புக் கூட்டமும் மாலை 5 மணிக்கு மாபெரும் சைக்கிள் ஊர்வலமும் நடைபெற்றன; ஊர்வலத்தில், ஆரவயல், அனுமந்தக்குடி, மங்கலக்குடி, புளியால், தொண்டி ஆகிய ஊர்களிலிருந்தும் திரளான தோழர்கள் அந்தந்தக் கிளைகளின் சார்பில் கலந்து ஊர்வலத்தைச் சிறப்பித்தனர்; கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

### குமாரபாளையம் :

மாலை 4½ மணிக்கு, ஊர்வலம் புறப்பட்டு, ஊர்பூராவும் சுற்றி வந்தது. இரவு 7½ மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# என். எஸ். இளங்கோ

## சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

### புலவங்காடு :

12—10—57 மாலை 5-30 மணியளவில் புலவன்காடு தி. மு. க. சார்பில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது; தோழர் தங்கவேலு தலைமை தாங்கினர்; தோழர்கள் அழகரசன், சித்திரவேலு, கடல்வண்ணன் முதலியவர்கள் பேசியபின், தோழர் என். எஸ். இளங்கோ இந்தியை எதிர்த்தும், வடவர் ஏகாதிபத்தியக் கொடுமைகளைச் சித்தரித்தும் சொற்பொழிவாற்றிய பின் லப்பன் நன்றி கூற கூட்டம் முடிந்தது.

### நங்கவள்ளி :

14—10—57 மாலை 6 மணிக்கு நங்கவள்ளி தி. மு. கழகச் சார்பில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நங்கவள்ளியில் நடைபெற்றது. 'பகுத்தறிவு' ஆசிரியர் தோழர் ப. கண்ணன் தலைமை தாங்கினர் தோழர்கள் பாலு, க. கு. சின்னசாமி முதலியோர் பேசியபின் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள்சொற்பொழிவாற்றினர்.

### குன்னத்தூர் :

16—10—57-ல், குன்னத்தூர் தி. மு. கழகச்சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. மழை அதிகமாக இருந்தபோதிலும், கூட்டம் வெற்றிகரமாக நடந்தேறியது. தோழர் நாவுக்கரசன் தலைமை தாங்க, தோழர்கள் அன்பரசன், ஜி. ஏ. வெங்கடாசலம், என். எஸ். இளங்கோ முதலியோர் கழகத்தின் கொள்கைகளை விளக்கியும், இந்தி எப்பாடுபட்டேனும் எதிர்க்கப்பட வேண்டும் என்றும் விளக்கவுரை ஆற்றினர்.

### திருச்செங்கோடு :

17—10—57-ல், திருச்செங்கோடு தி. மு. கழகச்சார்பில் நாற்பது கால் மண்டபத்தடியில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் டி. ஏ. நடேசன் தலைமையில்நடைபெற்றது; தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள், வடவர் இந்திமொழி புகுத்துவதை எடுத்துக் காட்டியும், நாட்டில் உள்ள நல்லறிவாளர்கள் அனைவரும் இந்தக் கொடுமையை எதிர்த்துக் கருத்தறிவித்திருக்கிருர்கள் என்றும் சுட்டிக்காட்டி, அரியதொரு உரை நிகழ்த்தினர்.

# வைரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை!

டிராய்ட், அக். 24—

இங்குள்ள தங்களின் தொழிற்சாலை ஒன்றில் இலட்சம் காரட் வைரம் உற்பத்தி செய்திருப்பதாக 'ஜெனரல் எலக்டிரிக் கம்பெனி' யார் தெரிவித்திருக்கின்றனர்.

எக்ஸ்ரே பரிசோதனை, இரசாயனப் பரிசோதனை, செறிவுச் சோதனை இவற்றில் எல்லாம், தாங்கள் உற்பத்தி செய்துள்ள வைரம், இயற்கை வைரங்களுடன் ஒத்திருப்பதைக் கண்டிருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

தாங்கள் 1958-ம் ஆண்டு இறுதிக்குள் மூன்றரை இலட்சம் காரட் வைரம் உற்பத்தி செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும், காரட் ஒன்று 4·25 டாலருக்கு (சுமார் ரூ : 23·4) விற்பதாகவும், இது இறக்குமதியாகும் இயற்கை வைரத்தைவிட 40 சதவிகிதம் அதிகம் என்றும், ஆனல் ஏராளமாகப் புதிய நவீன முறைகளில் உற்பத்தி செய்தால் விலையைக் குறைக்க முடியும் என்றும் அவர்கள் கூறுகின்றனராம்.

# எட்டாத கனிக்கு மரத்தைச் சாய்ப்பதா?

## மாவட்ட மன்றங்களை ஒழிப்பதேன்?

### சட்டமன்றத்தில் ஏ. கோவிந்தசாமி

சென்னை, அக். 26—

மாவட்ட ஆட்சிமன்றங்களை ஒழித்துவிட காங்கிரஸ் தீவிரமாக ஈடுபட்டிருப்பதன் உட்கருத்தை நமது கழக உறுப்பினர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் சட்டமன்றத்தில் அம்பலமாக்கியுள்ளதன் சாரம் இங்கே தரப்பட்டுள்ளது :—

"மாவட்ட ஆட்சி மன்றங்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கடந்த ஓராண்டுக் காலமாகவே நமது அரசாங்கம் பேசிவருகிறது. உடனடியாகச் சட்டத்தின் மூலம் இம்மன்றங்களை ஒழித்துக்கட்ட முனைவது தவறாகும். நானும் ஒரு மாவட்ட ஆட்சி மன்ற உறுப்பினன். இப்படித் திடீரென்று சட்டத்தைப் புகுத்திக் கட்டாயப் படுத்துவதும், உடனே நிறைவேற்ற வேண்டும் என்று வற்புறுத்துவதும் நல்ல அரசியல் முறையல்ல. எனக்கு இது ஆச்சரியத்தைத் தருகிறது. மக்கள் இதைப்பற்றி என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதையும் கூற விரும்புகிறேன்.

"மாவட்ட மன்றங்கள் மூலம் மக்களுக்கு நல்ல தொண்டாற்ற முடிந்துள்ளது. பல இடங்களில் காங்கிரசுக்கு மாறுபட்டவர்கள் வசம் மாவட்ட ஆட்சி மன்றங்கள் பல ஆண்டுகளாகத் திறமையாக நடத்தப்பட்டு வருகிறது. மாவட்டமன்றங்களில் அரசியலைப் புகுத்தி, மாவட்ட மன்றங்களைக் காங்கிரஸ் கைப்பற்ற முனைந்து தோல்வியடைந்துள்ளது. குறிப்பாக வட ஆற்காடு, தஞ்சை, மதுரை ஆகிய மாவட்டங்களில் காங்கிரசு அடைந்த ஏமாற்றத்தின் விளைவே இந்த ஒழிப்பு நடவடிக்கை. மேலும், காங்கிரஸ் ஆதரவு இல்லாத பகுதியில் முதல் முதல் 'பஞ்சாயத்து' அமைக்கப்பட்டு, மக்கள்மீது காங்கிரஸ் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டுள்ளது. மாவட்ட மன்றங்களை ஒழித்துவிட்டு காங்கிரசை மக்கள்மீது திணிக்க எடுத்துக்கொள்ளப்படும் முயற்சிதான் இந்தச் சட்டம் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

"சென்ற ஆண்டில், மாவட்ட ஆட்சிமன்றச் சீர்திருத்தம் பற்றி திரு. இரத்தினசபாபதி முதலியார் அளித்த முடிவுகள் விவாதிக்கப்படவில்லை. மாவட்ட ஆட்சி மன்றங்கள் மூலம் மக்களுக்குப் பல நன்மைகள் செய்ய முடியும். ஊழல்கள் இருப்பதாகக் கூறினாலும், அதைத் தனி அதிகாரிகளை நியமிப்பதன்மூலம் நீக்கிவிட முடியாது.

"எனவே, அவசர அவசரமாக இதில் ஈடுபடக் கூடாது என்ற என் கருத்தைக் கூறி முடித்துக் கொள்கிறேன்."

# மாவட்ட மன்றங்கள் மூடு விழா

## சட்ட மன்றத்தில் தீர்மானம்

சென்னை, அக். 26—

சென்னை மாநிலத்திலுள்ள மாவட்ட மன்றங்களின் ஆயுட்காலம் அக். 31-ம் நாள் முடிகிறது.

மாவட்ட மன்றங்களைப்பற்றி சென்ற சட்டசபைக் கூட்டத்தின்போது ஸ்தல ஸ்தாபன அமைச்சர் திருமதி லூர்து அம்மையார் அறிவித்ததையொட்டி இந்தக் கூட்டத்தில் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

மாவட்ட மன்றங்களை ஏன் மாற்றி அமைக்க சென்னை அரசாங்கம் முயற்சிக்கிறது என்பதும், மாற்றத்தின் பெயரால் மூடுவிழாவிற்கான முடிவுகளைத் துரிதமாகச் செயலாற்றி வருவதும் அறிந்ததே!

மாவட்ட மன்றங்களுக்கு நடத்த வேண்டிய தேர்தல்களைத் தள்ளிவைத்தும், தனி அதிகாரிகளை நியமித்து மாவட்ட ஆட்சி முறையைக் கவனிக்கவும், இன்று சட்டசபையில் ஓர் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு மாவட்ட மன்றங்கள் கலைக்கப்படுமாம்; எனவே தேர்தல் நடத்துவது வீண் செலவாம்!

மாநிலத்தின் தேசிய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிறுவப்படும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாவட்ட ஆட்சிமன்ற அதிகாரங்கள் வழங்கப்படுமாம்.

அதற்கான சட்டமும் கொண்டு வரப்படுமாம்.

தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தில் தி. மு. கழக உறுப்பினர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களும், மற்றும் திருவாளர்கள் கல்யாணசுந்தரம், விநாயகம், ரஷீத், லாசர், ஆதிமூலம், இராமசாமி நாயுடு, கருத்திருமன், இராமச்சந்திரன், கேசமணி, திருமதி அனந்தநாயகி ஆகியோரும் மற்றும் திருவாளர்கள் சின்னதுரை, சட்டநாதக் கரையாளர், சந்திரசேகரன், இலட்சுமிபதிராசு, தியாகராசன், நாகராசமணிகார், இராமசாமி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

விவாதத்திற்குப் பதிலளிக்கையில் அமைச்சர், 'மாவட்ட மன்றங்கள் கலைக்கப்படுவதற்குக் காரணம், அவைகள் சரிவர இயங்கவில்லை என்பதல்ல' என்று தெரிவித்து, மாவட்ட ஆட்சி அதிகாரம், இப்போது பெரிய சுமையாக இருப்பதைக் குறைத்து, சிறு அமைப்புகளிடம் அதை ஒப்படைக்க வேண்டும் என்ற அடிப்படையில்செய்யப்படுகிறது' என்று தெரிவித்தார்.

இடைக்காலத்தில் ஆலோசனை அமைப்புகளை ஏற்படுத்தும் யோசனையை அரசாங்கம் கொண்டுள்ளதாகவும் அவர் அறிவித்தார்.

இறுதியில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

'காமராசர் தலைமையில் இயங்கும்

# அமைச்சரவைமீது நம்பிக்கையில்லை'

## சட்டசபையில் தீர்மானம்

சென்னை, அக். 28—

அமைச்சரவைமீது நம்பிக்கையில்லை என்னும் தீர்மானத்தை கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் இன்று காலை சட்டசபைக் கூட்டத்தில் முன்மொழிந்து 12-30 மணி வரை பேசினார்.

### முன் செய்தி

"திரு காமராசர் தலைமையில் இயங்கும் அமைச்சரவைமீது நம்பிக்கையில்லை" என்ற தீர்மானம் ஒன்றை, சென்னை சட்டசபையில், பொதுவுடைமைக் கட்சித் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் 26-10-57-ல் கொண்டுவந்தார்.

சட்டமன்றத்தின் 54-வது விதியின்கீழ், இந்தத் தீர்மானம், கேள்விநேரத்திற்குப் பிறகு கொண்டுவரப்பட்டது.

இதற்குத் தேவைப்படும் 25 உறுப்பினர்களின் ஆதரவைவிட, மொத்தம் 40 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

சட்டசபை நடவடிக்கைகளை நிர்ணயிக்கும் குழுவின் முடிவுகளுக்கு இந்தத் தீர்மானம் கட்டுப்படவில்லை என்றும், திடீரென்று தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும், இருப்பினும் இராமநாதபுரம் கலவரத்தைப் பற்றி விவாதிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள 28, 29-ந் தேதிகளில் இதையும் விவாதிக்கலாம் என்றும் ஆளும் கட்சித் தலைவர் திரு. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

# அனாதைக் குழந்தைகள் பிரச்சினை

## சுப்பிரமணியம் கருத்து

சென்னை, அக். 27—

"குழந்தைகளுடைய —அதிலும் அனாதைக் குழந்தைகளுடைய பிரச்சினைகளை நாம் தீர்த்தாலன்றி எந்த ஒரு அபிவிருத்தித் திட்டமும் உண்மையில் வெற்றியடைய முடியாது"

என்று கூறிய நிதி மந்திரி சுப்பிரமணியம், 'குழந்தைகளின் மசோதா'வின் திருத்தியமைக்கப்பட்ட நகல் தயாராகிவிட்டது என்றும், சீக்கிரமே சட்டசபையில் அது தாக்கலாகும் என்றும் கூறியுள்ளார்.

அனாதை விடுதி நிர்வாகிகள் சங்க முதல் மாநாட்டில் பேசகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

# ரஷ்யாவின் புதிய பிரதமர் ஜுகாவ்?

## மார்ஷல் புல்கானின் கதி என்ன?

மாஸ்கோ, அக். 27—

ரஷ்யாவின் தற்காப்புத் துறை அமைச்சராயிருந்த மார்ஷல் ஜார்ஜி ஜுகாவ், அப்பதவியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்; அவருக்குப் பதிலாக, மார்ஷல் ரோடியன் யாகோவ் லெவிச் மாலினோவ்ஸ்கி என்பார் தற்காப்பு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஜுகாவ், அண்மையில் இந்தியா வந்திருந்தார்; கடைசியாக அவர், யூகோஸ்லேவியா, அல்பேனியா நாடுகளுக்குச் சென்றுவிட்டு மாஸ்கோ திரும்பிய அரைமணி நேரத்திற்குள் பதவியிலிருந்து நீக்கப்பட்ட செய்தி வந்தது.

இவர், மார்ஷல் புல்கானின் 1955 பிப்ரவரியில் பிரதமராக்கப்பட்டபோது, தற்காப்பு மந்திரியாக்கப்பட்டார்.

ஜுகாவ், இரண்டாம் உலகப் போரின்போது, மாஸ்கோ, ஸ்டாலின் கிராட், லெனின் கிராட் போராட்டங்களில் வெற்றிகண்ட வீரர் என்ற பெருமைக்கு உரியவர். அமெரிக்கக் குடியரசுத் தலைவராயிருக்கும் ஐசனோவர், யுத்தத்தின்போது ஜெனரலாயிருந்தார்; அவருடன் சேர்ந்து போரிட்ட வகையில், ஐசனோவருக்கு, ஜுகாவ் நண்பர் என்று கூறப்படுகிறது.

'ஜுகாவ் தற்காப்பு மந்திரிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டது, பதவி உயர்வு பெறுவதற்காகவே' என்று மாஸ்கோ வட்டாரத்திலிருந்து அறியமுடிவதாகவும் கூறப்படுகிறது.

"மாலங்காவ், மாலடோவ் முதலியோர், தலைமை அதிகார பீடத்திலிருந்து துரத்தப்படும் போது, புல்கானின், குருஷ்சேவுக்கு விரோதமாக நடந்து கொண்டார் என்ற செய்தி வெளியானது நினைவிலிருக்கலாம். அந்த வகையில் குருஷ்சேவ், புல்கானினையும் தொலைத்துக் கட்டிவிட்டால், நிம்மதியாக முழு சர்வாதிகாரியாகிவிடலாம் என்று கருதுகிறார்; எனவே தான் ஜுகாவை, புல்கானின் இடத்தில் அமர்த்துவதற்காக, அவரைப் பதவியிலிருந்து நீக்கியிருக்கிறார்" என்றும் கூறப்படுகிறது.

# மாநில ஆட்சிமொழியாகத் தமிழ்

## சட்டம் அமுலாகத் துவங்கும் இலாகாக்கள்

சென்னை, அக். 27—

ரெவினியூ, பொது வேலைகள், இந்துமத பரிபாலனம், கல்வி முதலிய இலாகாக்கள், ஆட்சிமொழிச் சட்டப்படி தமிழில் நிர்வாகம் நடத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இதன்படி, இந்த இலாகாக்களில் இனி கடிதப் போக்குவரத்து தமிழிலேயே இருக்கும் என்றும், இதனால் நிர்வாகத்தில் தாமதமோ தாக்குறைவோ ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் சர்க்கார் கூறியுள்ளது.

ஸ்தல நிர்வாகம், விவசாயம், கூட்டுறவு, கிராம-பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் இவற்றின் நிர்வாகமும் இனி தமிழில் நடைபெறும் என்று, சர்க்கார் அறிவித்துள்ளது.

# தெ. ஆ. மாவட்ட

## கிளைக் கழக நிர்வாகிகளுக்கு வேண்டுகோள்

★

தென் ஆர்க்காடு மாவட்ட மாநாடு குறித்து மேற்கொண்டு வேலைகளை மேற்கொள்ளவும், மற்றும் கழக ஆக்கவேலைகளைப்பற்றி முடிவெடுக்கவும், நமது மாவட்டக் கழக கமிட்டிக் கூட்டத்தை 24—11—57-ம் நாளன்று விருத்தாசலத்தில் கூட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கிளைக் கழக நிர்வாகிகள் தங்கள் ஊர்க் கிளையின் தெளிவான முகவரி, செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி ஆகியோரின் பெயர்--முகவரி ஆகியவைகளை 10-11-57-ம் நாளுக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதியனுப்ப வேண்டுகிறேன்.

தலைமை நிலையத்தில் மட்டும் பதிவு செய்து கொண்டு மாவட்டக் கழகத்தில் பதிவு செய்யப்படாமலிருக்கும் கிளைகளும் உடனே விவரத்தை எழுதியனுப்ப வேண்டுகிறேன்.

ஆங்காங்குள்ள வட்டக் கிளைகளும், கழகத் தோழர்களும் தங்களால் முடிந்த அளவுக்கு ஆங்காங்குள்ள கிளைகளுக்குத் தெரிவித்து மேற்கண்ட விவரங்களை எழுதியனுப்பச் செய்ய வேண்டுகிறேன்.

3—11—57-ம் நாளுக்குள் விவரம் எழுதியனுப்பும் கிளைகளுக்கே 24—11—57-ம் நாளில் நடக்கும் மாவட்டக் கமிட்டிக் கூட்ட அழைப்பு விடுக்க ஏதுவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், தற்போது சென்னை சட்டசபை நடைபெற்று வருவதால், சென்னையிலிருந்தே சில நாட்களுக்கு மாவட்டக் கழகப் பணிகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறபடியால், சட்டசபை முடியும்வரை கீழ்க்கண்ட முகவரிக்கே தொடர்பு கொள்ளுமாறு, தெ. ஆ. மாவட்டக் கழகத் தோழர்கள் வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட செயற்குழுக் கூட்ட அழைப்பு தனியாக அனுப்பப்படும்.

நிர்வாகிகள் விவரமும், மற்ற கடிதங்களும் அனுப்பவேண்டிய முகவரி :—

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.
செயலாளர்,
தெ. ஆ. மாவட்ட தி. மு. கழகம்,
'அறிவகம்'
இராயபுரம், சென்னை-13.

**ஏ. கோவிந்தசாமி M. L. A.**
**தெ. ஆ. மாவட்ட செயலாளர்**

# கழகக் கூட்டங்கள்

★

**சென்னை—புரசை :**
ஆதியப்ப முதலித் தெருவில்
29—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : கா. வெற்றியழகன்
பேசுவோர் :
**அண்ணா**
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
கே. ஏ. மதியழகன்

★

**கரூர் :**
முத்துராசபுரம் மைதானத்தில்
29—10—57 இரவு 8 மணிக்கு
பேசுவோர் :
தலைவர் : கே. ஏ. முருகேசனார்
இரா. நெடுஞ்செழியன்
ஏ. அம்மையப்பன்
என். ஆர். இராமசாமி எம். சி.

**கரூர் வட்ட தி. மு. க. செயற்குழுவினருக்கு**

29-10-57 பிற்பகல் 2-மணிக்கு கரூர் குருநாத முதலி தெருவில் உள்ள தோழர் சோமு அவர்கள் இல்லத்தில் கரூர் வட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம் பொதுச் செயலாளர் முன்னிலையில் நடைபெறும். சில முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

**சென்னை-கோடம்பாக்கம் தோழமைக் கழகத் துவக்க விழா**

**அண்ணா** கலந்து கொள்வார்

30—10—57 மாலை 6½ மணிக்கு சென்னை-கோடம்பாக்கம் வரதராசபேட்டை திடலில் (டிரஸ்ட்புரம் அருகாமை) மேற்படி விழா நடைபெறும். சுவாமி அருணகிரிநாத அடிகள் தலைமை வகிப்பார். அண்ணா, துணைப் பொதுச்செயலாளர் என்.வி. நடராசன், ஏ. எஸ். ஜேசுபாதம், முகில்வண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

**சுந்தரம் பிள்ளை நினைவு மலர் வெளியீட்டு விழா**

29—10—57 மாலை 6 மணிக்கு சென்னை இராஜாஜி மண்டபத்தில் முதலமைச்சர் திரு. காமராசர் தலைமையில், மனோன்மணீயப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை நினைவு மலர் வெளியீட்டு விழா நடைபெறும். கல்வியமைச்சர் திரு. சுப்பிரமணியம் மலரை வெளியிடுவார். பேராசிரியர்கள் ரா. பி. சேதுப்பிள்ளை, தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், கே. கே. பிள்ளை, மு. வரதராசனார், மேரி மாசிலாமணியம்மையார் ஆகியோர் பேசுவர்.

**வேதநாயகர் விழா**

29—10—57 மாலை 6-15 மணிக்கு சென்னை, ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தின் சார்பில் மேதை வேதநாயகனார் விழா நடைபெறும். தியாகராயர் கல்லூரி முதல்வர் எம். கே. சண்முகம் தலைமை வகிப்பார். தோழர் அறிவுடைநம்பி தோழியர் நிலாவதி-ராமசுப்பிரமணியம் ஆகியோர் பேசுவர். என். கமலா இன்னிசை வழங்குவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.